

# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க மூன்று நாள் சுற்றுப்பயணமாக விழுப்புரம், திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களுக்குச் செல்ல உள்ளார். அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு.

**06/11/2024 புதன்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 10:30 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் நூலகம் திறப்பு விழா | விழுப்புரம் - புதுச்சேரி பிரதான சாலை, விழுப்புரம். |
| காலை 11:00 மணி | அரசு ஆய்வுக் கூட்டம் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விழுப்புரம். |
| மதியம் 12:30 மணி | விழுப்புரம் தெற்கு மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்-துணை அமைப்பாளர்களுடன் சந்திப்பு | கலைஞர் அறிவாலயம், விழுப்புரம். |
| இரவு 7:00 மணி | சட்டமன்ற உறுப்பினர் கதிரவன் அவர்களின் இல்லத் திருமண வரவேற்பு | தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகம், சமயபுரம், திருச்சி. |

**07/11/2024 வியாழக்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 09:30 மணி | முரசொலி செல்வம் அவர்களின் படத்திறப்பு | கலைஞர் அறிவாலயம், தஞ்சாவூர். |
| காலை 09:50 மணி | மக்களவை உறுப்பினர் அலுவலகம் மற்றும் நூலகம் திறப்பு விழா | இராமநாதன் ரவுண்டானா, தஞ்சாவூர். |
| காலை 10:15 மணி | பூதலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் 'கல்லணை' செல்லக்கண்ணு அவர்களின் இல்லத் திருமண விழா | மகாராஜா மஹால், தஞ்சாவூர். |
| காலை 11:15 மணி | கழகப் பவள விழாவை முன்னிட்டு கழகக் கொடியேற்றுதல் | கண்டியூர், திருவையாறு தெற்கு ஒன்றியம், தஞ்சாவூர். |
| மதியம் 12:00 மணி | பேறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் சிலைத் திறப்பு மற்றும் நூலகம் திறப்பு | கோனேரிராஜபுரம், திருவையாறு தெற்கு ஒன்றியம், தஞ்சாவூர். |
| மதியம் 12:45 மணி | அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் | அண்ணா மண்டபம் தஞ்சாவூர் |
| மதியம் 01:15 மணி | தஞ்சாவூர் மத்திய மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்-துணை அமைப்பாளர்களுடன் சந்திப்பு | பி.எல்.ஏ. திருமண மஹால், தஞ்சாவூர். |
| இரவு 07:00 மணி | மிசா ஏழுமலை அவர்களின் இல்லத் திருமண வரவேற்பு | இராம்லக்ஷ்மி பாரடைஸ், மாதவரம், சென்னை |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள்: 04-11-2024



## சமூக வலைதளங்களில் வலம் வருவது!




துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு

# திருவள்ளூர் மேற்கு மாவட்டம் முழுவதும் நல உதவிகள்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

*திருவள்ளூர் நவ 06*

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம். மாவட்ட அவைத்தலைவர் கே..திராவிடபக்தன் தலைமையில் திருத்தணியில் நடைபெற்றது. திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு உறுப்பினருமான வி.ஜி.இராஜேந்திரன் முன்னிலை வகித்தார். இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ கலந்து கொண்டு சிறப்புரையற்றினார்

அப்போது அவர் பேசியதாவது

தமிழ்நாடு துணை முதலமைச்சரும் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் இளைஞர்களுக்கு மற்றும் பெண்களுக்கும் விளையாட்டுப் போட்டிகள் பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் மருத்துவ முகாம் ரத்தம் தானம் முகாம் கண் சிகிச்சை முகாம் பொதுக்கூட்டம் நடத்திடவும் வேண்டுமென்று தெரிவித்தார் அது மட்டுமல்லாமல்

திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு முழுவதும் உள்ள கழக கொடிகள் ஏற்றி பிறந்த நாள் விழா வெகு விமர்சையாக கொண்டாட வேண்டும்

2026 சட்டமன்ற தேர்தல் வரைய இருப்பதால் அதற்கான தேர்தல் பணிகளை மேற்கொள்ள வேண்டும்

தமிழ்நாடு முதலமைச்சர். கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 1-1-2025 தகுதி யேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29-10-2024 அன்று வெளியிட்டது

திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும், 28-11-2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரி பார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1-1-2025அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும். இதனடிப்படையில் 2025ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிரம்பியவர்களின் பெயர்களையும். வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம். பூபதி, தொகுதி பார்வையாளர்கள் சண்முகநாதன், மாஸ்டர். பெ.சேகர், கழக விவசாய அணி துணை செயலாளர் ஆர்.டி.இ.ஆதிஷேசன், கழக நெசவாளர் அணி துணை தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம், மாநில தொண்டரணி பயிற்சியாளர் மாஸ்டர். இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர் வி.சி.ஆர்.குமரன், பா.உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, எம்.மிதுன்சக்ரவர்த்தி, பொதுகுழு உறுப்பினர்கள் ப.சிட்டிபாபு, எ.கே. ஆதாம், மு.சுப்பிரமணியம், பி.ராஜேஸ்வரிஇரவிந்திரநாத், ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் பெ.வினோத்குமார், பெ.பழனி, சி.என்.சண்முகம், சி.ஜெ.சீனிவாசன், பி.டி.சந்திரன், என்.கிருஷ்ணன் சி.சு.ரவிச்சந்திரன், எஸ்.மகாலிங்கம், கூளுர். எம்.ராஜேந்திரன், மோ.ரமேஷ், கே.அரிகிருஷ்ணன், கே.ராஜேந்திரன், டி.ஆர்.கே.பாபு, சி.ஜெ.செந்தில்குமார், அணிகளின் அமைப்பாளர்கள் ம.கிரண், முரளி சேனா, சரஸ்வதி சந்திரசேகர், சி.சு.விஜயகுமார், வி.எஸ். நேதாஜி, ஜி.கோவிந்தம்மாள், கே.மதுசூதனன், ப.கோபால், எம்.எஸ்.அருண்குமார், ஜி.சித்திக் அலி, எஸ்.குமரன், இ.கே.உதயசூரியன், சி.எம்.ரவி, மத்தூர் எஸ்.பன்னீர், என்.நந்தகோபால், எம்.சீனிவாசன், சிலம்பு பன்னீர், டி.மோதிலால், டி.எம்.சுகுமாரன், டி.கே. பாபு, புவனேஷ்குமா, டி.ஆர்.தீலிபன், உள்பட கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.



தி.மு.க. சட்டத்துறை தென் மண்டலம் – 1 தி.மு.க. சட்டத்துறை சார்பில் நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி, தேனி மாவட்ட, மாநகர வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கலந்துகொண்ட ஆலோசனைக் கூட்டம் நெல்லை அப்ஃனா பார்க்கில் மாநில சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. உடன் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன், சட்டத்துறை துணைச் செயலாளர் எஸ்.ராஜா முகம்மது, தலைமைக் கழக வழக்கறிஞர் மனோஜ், நெல்லை கிழக்கு மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் ஜெ.செல்வ சூடாமணி உள்பட நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் திருத்தணியில் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிடபக்தன் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் பல்வேறு ஆலோசனை வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.